# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

30.04.2018–ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

052. வந்தவாசி நகராட்சி சிறுபான்மையினர் 25 சதவீதத்திற்கு மேல் வசிக்கும் நகரத்தினை தேர்வு செய்து கல்வி, சுகாதாரம் குடியிருப்புகள் மின்சாரம் மற்றும் சாலை வசதிகள் மேம்படுத்திட விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மமாவட்ட ஆட்சித்தலைவரின் செயற் முறை ந.க.எண்.N6/16295/2017, நாள்.10.01.2018ல் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி திட்டத்தில் உரிய நிதிகள் பெற உடனடியாக டிபிஆர் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், உரிய வரைபடங்கள், போட்டோ நகல்கள் உடன் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியுள்ளதாலும்,நகரத்தின் நலநன கருத்தில் கொண்டு நகராட்சிகள் சட்டம் 1920 விதி 15ன் கீழு ஆலோசகர் மூலம் டிபிஆர் தயார் செய்த வகையில் மேற்கொண்ட செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.020 /2018/இ1, நாள்.23.02.18)

தீர்மானம் **(பதிவு செய்யப்பட்டது)**

053. வந்தவாசி நகராட்சி 2018–19ம் நிதியாண்டில் வார்டு எண்.21 , வாணியர் தெருவில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி இடத்தில் ODF பெறவேண்டியுள்ளதாலும், மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 021 /2018/இ1, நாள்.23.02.18)

054. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.21, வாணியர் தெரு சுகநதி அருகில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டைவிட) |
|---|---|---|
| 1. | திரு.S.வீரராகவன், ஒப்பந்ததாரர் | 0.02 சதவீதம் குறைவு |
| 2. | திரு.M.பாஷா, ஒப்பந்ததாரர் | 0.38 சதவீதம் குறைவு |
| 3. | திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரர் | 33.10 சதவீதம் குறைவு |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 33.10 சதவீதம் குறைவாக அளித்துள்ள திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ஏற்றது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு–**

மேற்படி பணியின் அவசர அவசரத்தினை கருத்தில் கொண்டும், ஒப்பந்ததாரர் திரு.அ.அஜீஸ், ஒப்பந்தத்தைவிட 33.10 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்து இருந்தாலும் கூடுதல் காப்பு தொகை (Additional Levy Deposit) ரூ.35,000/– செலுத்தியுள்ளதால் மேற்படி பணியின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

(ந.க.எண்.0058/2018/இ1, நாள்.24.04.18)
தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

055.வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திவரும் ஜீப் வாகனம் எண்.TN25/U/7978 – பழுது ஏற்பட்டுள்ளதை சீர்செய்து தருமாறு ஓட்டுநர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நிர்வாக நலன் கருதி உடன் வாகனம் பழுது பார்க்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி வாகனம் பழுது பார்க்கப்பட்டதற்கு உண்டான தொகை ரூ.1975/–ஐ தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வழங்கியதையும் ஏற்கலாம்.

(ந.க.எண். 0019/2018/இ1, நாள்.06.04.18)
தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

056. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பொது மக்கள் அமருவதற்கு அலுவலகத்தில் இருக்கைகள் பற்றாக்குறையாக உள்ளதால் அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று அலுவலகத்திற்கு உடன் வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் , மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | பொருள்களின் விவரம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | பிரித்தி | கேட்டல் 1லிட்டர் | பிளாக்ஸ் PVCChard | |
| 1 | ஸ்ரீஅம்மன்எண்டர் பிரைசஸ், பாக்குகாரத்தெரு, வந்தவாசி | 1 | 1900 | 1900 | (7)Nos 9100 | 11900 |
| 2 | ரபி ஸ்டோர், பஜார்வீதி, வந்தவசி. | 1 | 2050 | 975 | 9520 | 12545 |
| 3 | வசந்தம், பஜார்வீதி, வந்தவாசி. | 1 | 1975 | 950 | 9275 | 12200 |

<u>குறிப்பு</u> – குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ அம்மன் எண்டர் பிரைசஸ் பொருட்கள் வாங்கி கொள்ள தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாங்கி கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி வாகனம் பழுது பார்க்கப்பட்டதற்கு உண்டான தொகை ரூ.1975/–ஐ தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வழங்கியதையும் ஏற்கலாம்.

(ந.க.எண். 0019/2018/இ1, நாள்.06.04.18)
தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

057. வந்தவாசி நகராட்சியில் போதிய எழுத்தர் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் மனுக்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அலுவலகப்பணிகள் பாதிக்காத வண்ணம் பொதுமக்கள் நலன்கருதியும், பிரிவு எழுத்தர்கள் பணிகளை கூடுதலாக எழுத்துப்பணிகள் மேற்கொள்ளவும், அரசாணை நிலை எண்.170/நாள்.18.12.2009ல் வழிகாட்டுதல்படி நிபந்தனை வ.எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும், எழுத்தர் பணிக்கு திரு.அ.சர்புதீன், முன்னாள் எழுத்தர் என்பவரை பிரதிமாதம் ரூ.11650/– வீதம் மார்ச்சு 2018 முதல் பிப்ரவரி 2019 வரை 12 மாதத்திற்கு (ஓர் ஆண்டிற்கு) எழுத்தர் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

நகராட்சியில் போதிய எழுத்தர் பணியிடங்கள் பற்றாக்குறையாக உள்ளதால் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் அரசாணை நிலை எண்.170, நாள்.18.12.2009–ன்படி நிபந்தனை வரிசை எண். 1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு எழுத்து பணியினை தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும், இதர பணிகளை மாதந்தோறும், நடைபெறும் மாதாந்திர அமர்வுக்கூட்ட தணிக்கைத் தடைக்கான பத்திகள் தயார் செய்யவும், கணக்கு An பிரிவிற்கு கூடுதலாக பணிபுரியவும், மேற்கொள்ள திரு.அ.சர்புதீன் முன்னாள் உதவியாளரை பிரதிமாதம் ரூ.11650/– வீதம் (12 மாதத்திற்கு மார்ச்–2018 முதல் பிப்ரவரி –2019 வரை ) ஓர் ஆண்டு செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.0565/2018/எச்1, நாள்.09.04.2018)
தீர்மானம் (அனுமதிக்கப்பட்டது)

058. வந்தவாசி நகராட்சியில் போதிய எழுத்தர் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அலுவலகப்பணிகள் பாதிக்காத வண்ணம் பொதுமக்கள் நலன் கருதியும், பிரிவு எழுத்தர்கள் பணிகளை கூடுதலாக எழுத்துப்பணிகள் மேற்கொள்ளவும், அரசாணை நிலை எண்.170/ நாள்.18.12.2009ல் வழிகாட்டுதல்படி நிபந்தனை வ.எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும் எழுத்தர் பணிக்கு திரு.R.சண்முகம், முன்னாள் தலைமை எழுத்தர் என்பவரை பிரதிமாதம் ரூ.9200/– வீதம் 12 மாதங்களுக்கு (பிப்ரவரி–2018 முதல் ஜனவரி–2019 வரை) ஒரு ஆண்டிற்கு எழுத்தர் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

நகராட்சியில் போதிய எழுத்தர் பணியிடங்கள் பற்றாக்குறையாக உள்ளதால் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அரசாணை நிலை எண்.170, நாள்.18.12.2009–ன்படி நிபந்தனை வரிசை எண். 1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு எழுத்தர் பணியினை தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும், மேற்கொள்ள திரு.R.சண்முகம் முன்னாள் உதவியாளர் என்பவரை பிரதிமாதம் ரூ.9200/– வீதம் பிப்ரவரி–2018 முதல் ஜனவரி 2019 மாதம் வரை 12 மாதத்திற்கு (ஓர் ஆண்டுக்கான) செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.0141/2018/இ1, நாள்.09.02.18)
தீர்மானம் (அனுமதிக்கப்பட்டது)

**059.** நகராட்சியின் நிர்வாக ஆணையர் அவர்கள், வந்தவாசி நகராட்சிக்கு ஆணையாளர் மற்றும் பொறியாளர் இருவரும் அலுவலக தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் பகிர்ந்து கொள்ளவும், உடனுக்குடன் அறிவுரைகள் அனுப்பவும் இரண்டு கைபேசி வாங்கப்பட்டது. மேலும் கைபேசி பயன்படுத்தப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1178/– வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்றுகைபேசி கட்டணம் தொகை ரூ.1178/–ஐ வழங்கியதற்கு மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். /2018/இ1, நாள்.12.04.18)
தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

**060.** வந்தவாசி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதியில் பூங்கா மற்றும் திறந்தவெளியில் 3 நுண்ணிய உரம் தயாரிக்கும் தொட்டி அமைக்கும் பணிக்கு ரூ.1,50,000/– (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) மதிப்பீட்டில் பணிமேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. 2018–2019ம் ஆண்டில் மேற்படி பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0025/2018/இ1, நாள்.16.04.18)
தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

**061.** ந.க.எண்.2833/இ5/2013, நாள். 04.2018 மற்றும் ந.க.எண்.17197/2016/பஈஉ. மாவட்ட ஆட்சிதலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ஆணை நாள்.02.04.18ன்படி வந்தவாசி நகராட்சி பகுதியில் டெங்கு நோய்பரவலை தடுக்கும் பொருட்டு 1000 மக்கள் தொகைக்கு ஒரு டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் வீதம் தற்காலிக அடிப்படையில் ஏப்ரல் மாதம் 2018 முதல் ஜீன் 2018 வரை விட்டு விட்டு மழைபெய்தல், கோடைக்கருதி குடிநீர் சேமிக்கும் பழக்கத்தினாலும் ஏடிஸ் கொசு புழுக்கள் உற்பத்தியை வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் அதிகம் தோன்றி நோய் தொற்று அபாயத்தை தடுக்க நகர் பகுதியில் 30 டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களை தற்காலிகமாக 10.04.2018 முதல் 30.06.2018 வரை மூன்று மாதங்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு நபர்க்கு ரூ.200/– வீதம் மொத்தம் 5 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1530/2017/எச்1, நாள்.18.04.18)

தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

**062.** வந்தவாசி நகராட்சி அனைத்து இடங்களிலும் தெருவிளக்கு பராமரிப்புகாக அவசர அவசியம் கருதி விதி 15–ன்கீழ் தெருவிளக்கு உபகரணங்கள் வேலூார் கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் வாங்க ரூ.4,41,866/– செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1444/2018/இ1, நாள்.18.04.18)

தீர்மானம் **(பதிவு செய்யப்பட்டது)**

**063.** வந்தவாசி நகராட்சியில் ஆணையாளர் அவர்களின் இருக்கை பழுதடைந்துள்ளதால் அவசரம் அவசியம் கருதி உடன் பழுது பார்த்துக்கொள்ளவும், நகராட்சி சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி 1920 பிரிவு 15ன்கீழ் செலவினம் ரூ.900/– மேற்கொண்டதற்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.055 /2018/இ1, நாள்.19.04.18)**

தீர்மானம் **(பதிவு செய்யப்பட்டது)**

**064.** வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் செல்வி.வ.அனுசுயா என்பவரின் அக்கா மகன் திருமணத்திற்காக முன்பணம் ரூ.10,000/– ம் வழங்கவும், மேற்படி முன்பணத்தினை மாத ஊதியத்தில் ரூ.1000/–பிடித்தம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி திருமணம் முன்பணம் ரூ.10,000/– வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0563/2018/எச்1, நாள்.19.04.18)**

தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

**065.** வந்தவாசி நகராட்சி வார்டு–**1,4** மற்றும் வார்டு–**6** பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**7.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு 2018–19 பொது நிதியில் மேற்படி பணியினை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.025/2018/இ1, நாள்.23.04.18)**

தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

**066.** வந்தவாசி நகராட்சி அலுவலக உபயோகத்துக்கும், மற்றும் பொறியாளர் பிரிவு உபயோகத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் TN25/U 7978 –க்கு கீழ்வரும் விபரத்தில் காணும் பழுதுகள் நீக்கம் செய்யவும், அரசு அங்கீகாரம் பெற்ற மஹிந்திரா ஜெயின் கார்ஸ் நிறுவனம் மூலம் பழுதுகள் நீக்கம் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பழுதுகள் நீக்கம் விபரம்</u>

1.ஆயில் சர்வீஸ் செய்தல்
2. 4 டயர்கள் புதியதாக மாற்றுதல்
3.குளிர்சாதனப்பெட்டி புதியதாக பொருத்துதல் மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்தல்.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் தொகை வழங்கவும், மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.0640/2018/இ1, நாள்.30.04.18)**

தீர்மானம் **(அனுமதிக்கப்பட்டது)**

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி